Vol. 9 No. 1
மார்கழி 2051 - பங்குனி 2052
January - March 2021
ISSN : 2321-0737

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. Aranga. Pari*

*Editorial Board*
*Dr. S. Rajaram*
*Dr. G. Rajagopal*
*Dr. PM. Jamahir*
*Dr. P. Velmurugan*
*Dr. A. Rameez*
*Dr. E.R. Ravichandran*
*Dr. K. Thilagavathi*
*Dr. G. Sheik Meeran*
*Dr. P. Selvakumar*
*Dr. J. Chandrakala*
*Dr. T.K. Jasmin Sudha*
*Dr. R. Tamilselvan*
*Dr. S. Ramesh*
*Dr. S. Thangamani*
*Dr. Vaani Arivalan*
*Dr. Manivannan Murugesan*
*Dr. G. Mariappan*
*Dr. K. Manickaraj*

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Thamizh Journal)

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

**27**

Scanned with CamScanner

# க.சுதாகரின் 6174 புதினத்தில் அறிவியல் புனைவுகள்

முனைவர் ஞா. பெஸ்கி
இணைப்பேராசிரியர் & தமிழாய்வுத்துறைத்தலைவர், தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது),
திருச்சிராப்பள்ளி-2, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

மனித இனத்தின் தோற்றுவாய் குறித்த கருத்தாக்கங்களுள் ஒன்றாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் முன்வைக்கப்பெற்றதே 'லெமூரியாக் கண்டம்' என்பதாகும். ஆப்பிரிக்க –ஆசிய கண்டங்களின் இணைப்பாக இந்தியப் பெருங்கடலில் பல மில்லியன் ஆண்டுகளுக்குமுன் இருந்திருக்கலாம் என்று இந்நிலப்பரப்பு இருந்ததாகக் கருதப்பெற்றது. இங்கிலாந்தைச் சார்ந்த உயிரியல் வல்லுநர் பிலிப் ஸ்க்லேட்டர் இந்தியாவிற்கும் மடகாஸ்கருக்கும் இடையில் இருந்த நிலப்பரப்பு என இதனை வரையறுத்தார். எனினும் புவியடுக்கு அசைவுகள், கண்ட நகர்வுகள் போன்ற புவியியல் காரணிகளை முன்னிறுத்தி இருபதாம் நூற்றாண்டில் இக்கருத்தாக்கம் கைவிடப்பட்டது. எனினும் தமிழிலக்கியப்பரப்பில் சுட்டப்படுகின்ற குமரிக்கண்டம் என்னும் சொற்றொடர் இதனோடு ஒப்புமைப்படுத்திப் பார்க்கப்படும் வழக்கையும் காணமுடிகிறது. இத்தகைய லெமூரியாக் கண்டத்தின் அழிவில் தொடங்குவதாகக் க.சுதாகர் படைத்த '6174' என்னும் புதினமானது லெமூரியத்தலைவர் மற்றும் லெமூரியர்களால் இரண்டாகப் பிளக்கப்பட்டு இருவேறு இடங்களில் புதைக்கப்பெற்ற படிகத்தைத் தேடிய பயணமாக அமைந்துள்ளது. அறிவியல் கருத்துகளையும் இலக்கியப் புனைவுகளையும் கணிதவியல் எண்மங்களையும், துப்பறியும் திறன்களையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ள இப்புதினத்தில் இடம்பெற்றுள்ள அறிவியல்புனைவின் கூறுகளைக் கண்டறிவதாக இக்கட்டுரை அமைகிறது.

**கலைச்சொற்கள்**

கேபரிகர் மாறிலி, எண்மங்கள் , சக்திபீடம் (Pyramid), பிராமி எழுத்துகள், கோலங்கள், வடிவக் கணக்கியல், ஸ்பெக்ட்ரோமீட்டர், விண்கற்கள், செயற்கைக்கோள், சீலகந்த் மீன்கள், ஹர்ஷத் எண், லோனார் ஏரி, படிகங்கள் (crystal), ஆனைக்கொன்றான் பாம்பு (Anaconda), கணிதக் குறியீடுகள்.

## முன்னுரை

அறிவியல் கண்டுபிடிப்புகளாலும் தொழில்நுட்பப் புரட்சியினாலும் மனிதர்களது வாழ்க்கை முறையில் பெரும் மாற்றங்கள் விளைந்துள்ளன. அறிவியலின்றி மனிதன் தனது வாழ்க்கையைச் செலுத்த முடியாத நிலை இன்று உருவாகியுள்ளது. இவ்வாழ்க்கை முறையினை இலக்கியத்தின் வாயிலாகப் பிரதிபலிக்கும் போது இலக்கியத்தில் அறிவியல் கண்ணோட்டம் என்பது தவிர்க்க இயலாதாகின்றது. இன்றைய சூழலுக்கு ஏற்பத் தமிழ்மொழி தன் ஆற்றலை, திறத்தை அறிவியல் மொழியாக வெளிப்படுத்த வேண்டியுள்ளதால் அதற்கேற்ப மொழிசார்பான முயற்சிகளும் அமைய வேண்டியது தேவைப்படுகிறது. அதற்கேற்ப இன்று கலைச்சொல்லாக்கம், தமிழ் மென்பொருள் பயன்பாடு, அறிவியல் படைப்பிலக்கியம் போன்ற நிலைகளில் தமிழில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இத்தகைய பின்னணியில் உருவெடுத்த க.சுதாகரின் 6174 என்னும் புதினமானது அறிவியல் கூறுகளின் பின்னணியையும் தமிழிலக்கியச் செல்வாக்கினையும் இந்தியச் சிந்தனைமரபையும் கொண்டு அமைந்துள்ளது. இத்தகையப் புதினத்தில்



Scanned with CamScanner

அறிவியல் புனைவின் தன்மையைக் கண்டறிவதாக இக்கட்டுரை அமைகிறது.

## அறிவியல் புனைகதைகள்

தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்த வகையில், பண்டைய காலம் தொட்டே அறிவியலும் இலக்கியமும் தாமரைமேல் தண்ணீராகவே இருந்து வந்துள்ளன. இலக்கியத்தின் ஊடே ஆங்காங்கே அறிவியல் செய்திகள் இடம்பெற்றனவே தவிர, அறிவியலுக்கு முக்கியத்துவம் தரும் வகையில் அறிவியல் தொழில்நுட்பச் சார்புள்ள இலக்கியங்கள் உருவாகவில்லை. வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் அறிவியலின் தாக்கம் நீக்கமற நிறைந்துள்ளது என்றாலும் மக்களிடையே அறிவியல் உணர்வும் சிந்தனையும் போதிய அளவில் இல்லை. அறிவியல் புனைகதை இலக்கியம் விரைந்து வளர, **"மக்களிடையே அறிவியல் அறிவையும் சிந்தனையையும் உருவாக்க அறிவியல் உண்மைகளைக் கற்றறிதல் அவசியம். அவ்வாறு கற்க இயலாதவர்கட்கு, அறிவியல் அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட கதைகளின் மூலம் அறிவியல் உண்மைகளைப் புகட்ட வேண்டும்"**[1] என்று மணவையார் குறிப்பிடுகின்றார்.

"அறிவியல், இலக்கியம் ஆகிய இரண்டின் தனித்தன்மைகளும் ஒருங்கிணைந்து ஒருருக் கொண்ட நிலையில் அமைவதே அறிவியல் படைப்பிலக்கியம் ஆகும்."[2] கல்வி நிலையில் அறிவியல் தமிழ் வளர்ச்சிக்குப் 'பாடநூல்கள்' கருவியாய் அமைவது போன்று, பொதுநிலையில் அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு 'அறிவியல் படைப்பிலக்கியம்' அடிப்படையாய் அமைகின்றது. இவற்றுள் அறிவியலை அடிப்படையாய்க் கொண்டு அமையும் சிறுகதை, புதினம் போன்றவை அறிவியல் புனைகதையாக அறியப்படுகின்றது.

அறிவியல் புனைகதை பற்றி சுஜாதா, **"விஞ்ஞானக் கதை என்பது விஞ்ஞானப் படி சாத்தியமாக இருக்க வேண்டும் என்று பலர் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். அது தவறு. விஞ்ஞானக் கதை (சைன்ஸ் ஃபிக்ஷன்) என்பதன் தற்போதைய வடிவத்தில் அது எல்லையற்ற கற்பனையாக இருக்கிறது. அதனால் மாற்று உலகங்களையும், மாற்றுச் சித்தாந்தங்களையும் படைக்க முடிகிறது. —— கதையில் இன்றைய மனிதனின் உணர்ச்சிகளுடனும் ஆபாசங்களுடனும் ஏதாவது ஒரு சம்பந்தம் அல்லது தொடர்பு காட்ட வேண்டும். அப்போது தான் அதிக சுவாரஸ்யம் ஏற்படுகிறது"**[3] என்று குறிப்பிடுகின்றார். அவரது கூற்றுப்படி, **அறிவியல் புனைகதை = அதீத கற்பனை அறிவியல் கூறுகள் + மனித மனங்களின் கூறுகள்** என்று வரையறுக்க முடிகிறது. இத்தகைய போக்கிலேயே அறிவியல் புதினங்கள் அமைகின்றன.

## க.சுதாகரின் படைப்புலகம்

தூத்துக்குடியில், கஸ்தூரி ஐயங்கார், திருவேங்கடம் அம்மாளுக்கு மகனாகப் பிறந்த இவர் 1992 முதல் மும்பையில் அறிவியல் கருவிகள், மென்பொருட்கள் விற்பனை, சந்தைப்படுத்தல் போன்ற துறைகளில் பணியாற்றினார். இவரின் முதல் சிறுகதை 'செங்கால்நாரை' 2001ஆம் ஆண்டு 'சௌந்தர்யசுகன்' சிற்றிதழில் வெளியானது. எனினும் அறிவியல் சார்ந்து இவர் எழுதி வம்சி பதிப்பகம் வெளியிட்ட '6174' என்னும் புதினம் தமிழிலக்கியப் பரப்பில் இவருக்குப் பரவலான அறிமுகத்தை ஏற்படுத்தித் தந்தது. திருப்பூர் தமிழ்ச்சங்கத்தின் சிறந்த புதின விருது, கலகம் அமைப்பினரின் சிறந்த புதினம் விருது போன்றவற்றை இப்புதினம் பெற்றது.

இவர் எழுதிய இரண்டாவது புதினம் '7.83 ஹெர்ட்ஸ்' வாசகசாலை அமைப்பின் சிறந்த புதினத்திற்கான விருதைப் பெற்றது. இவரின் மூன்றாவது படைப்பான 'நிறக்குருடு' எகம்பராமாயண அடிகளை மையமாக வைத்து எழுதப்பட்ட சிறுகதைத்தொகுப்பாகும். 'டர்மரின் 384' என்னும் இவரது புதினம் மஞ்சளை அடிப்படையாக வைத்து, அதிலிருந்து



Scanned with CamScanner

கண்டுபிடிக்கப்படும் மருந்திற்குக் காப்புரிமை கோரும் நிகழ்வுகளையும் உலகளாவிய சதிகளையும் பின்னணியாக வைத்து எழுதப்பட்டதாக அமைந்துள்ளது. மேலும் இவர் எழுதிய 'வலவன் கதைகள்' என்னும் சிறுகதைத் தொகுப்பு ஓட்டுநர்களின் வாழ்வியலைப் பன்முகத் தன்மையில் சித்திரிப்பதாக அமைந்துள்ளது.

### புதினத்தலைப்பு-6174

மராட்டிய மாநிலத்தில் பிறந்த ராமச்சந்திர கேபரிகர் என்னும் கணிதமேதை கண்டுபிடித்த கேபரிகர் எண்கள் கணிதத்தில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன. அத்தகைய எண்கள் வரிசையில் 6174 என்பது கேபரிகர் மாறிலியாக அமைந்துள்ளது. அந்த எண்ணைத் தலைப்பாகக் கொண்டு க.சுதாகர் இப்புதினத்தைப் படைத்துள்ளார். 6174 என்னும் எண்ணில் உள்ள எண்மங்களை முதலில் இறங்குவரிசையாகவும், ஏறுவரிசையாகவும் மாற்றி எழுதிக்கொண்டபிறகு அதன் இறங்குவரிசை எண்ணிலிருந்து ஏறுவரிசை எண்ணைக் கழித்தால் அப்போது மீண்டும் அதே 6174 என்னும் எண் வரும். எந்தவொர் எண்மமும் மீண்டும் பயின்று வராதவகையில் அமைந்த எந்தவொரு நான்கு எண்ம எண்களையும் மேற்கண்ட செயல்முறைக்கு உட்படுத்தினால் இறுதியில் 6174 என்னும் கேபரிகர் மாறிலியே வரும். சான்று: (9876-6789 = 3087)— (8730-0378=8352) —— (8532-2358 =6174) இந்த எண் லெமூரியப் படிகத்தைத் தேடும் பயணத்தில் பாதைகளையும் அடுத்த இலக்கினையும் கண்டறிவதற்கான புதிராகக் கையாளப்படுவதால் அதனையே இப்புதினத்தில் தலைப்பாகக் க.சுதாகர் கையாண்டுள்ளார்.

### 6174இல் அறிவியல் புனைகதை கட்டமைப்பு

இலக்கிய இன்பத்திற்காகவும் அழகியல் உணர்வை நாடும் கலைதேர் உள்ளத்தின் நிறைவுக்காகவும் இலக்கியம் நாடிய மனிதன், தொழிற்புரட்சிக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சியின் விளைவால் புதிய கோணங்களில் இலக்கியத்தை அணுக முற்பட்டான். அவ்வாறு தோன்றியது தான் அறிவியல் புனைகதை ஆகும். "நவீன அறிவியல் புனைகதைகள் 'உணர்த்தல்' பண்புடன், அறிவியல் கருத்து பரப்பும் நோக்கமும் உடையனவாய்த் திகழ்கின்றன"[4] என்று நெல்லை சு. முத்து குறிப்பிடுகின்றார்.

மனித இனத்தின் தோற்றக்களமாக எடுத்துரைக்கப்படுகின்ற லெமூரியாவில் தொடங்கி மெக்ஸிகோ நகரில் முடிவதாக அமையும் 6174 புதினம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம், தற்காலம் என்னும் இருவேறுபட்ட காலங்களிடையே பயணிக்கிறது.

சக்திப்பீடம் அழிக்கப்பட்டபிறகு, லெமூரியர் தலைவன் ஆமூன், "மனித இனம் - அறிவு மிக அதிகம். அவர்களுக்கு. மனக்கட்டுப்பாடு சிறிதும் இல்லாத மனிதர்கள். பேராசை, புகழ், பிறரை ஆளுதல் என வெறித்தனமாக உலகை அழிப்பார்கள். அவர்களிடம் இச்சக்தி கிடைத்தால்......."[5] என்று லெமூரியர்களிடையே கூறிய விளக்கம் அவர்களுக்கு மட்டுமல்ல. வாசகரையும் தன்வயப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

லெமூரியாவில் தொடங்கும் கதை, நிகழ்காலத்தில் குறியீட்டுச் சொற்கள் அடங்கிய பல்வேறு புதிர்களைப் பற்றிய தேடலில் சுழல்வதாகக் கதைப்போக்கு அமைந்துள்ளது. இறுதியில் உலக அழிவை எதிர்நோக்கும் ஒரு தீவிரவாதக் கூட்டத்தினிடமிருந்து இவ்வுலகைக் காப்பாற்றுவதாகக் கதை நிறைவு பெறுகிறது. லெமூரியா கண்டத்தில் தொடங்கி, பிரமிடுகள், பிராமி எழுத்துகள், கோலங்கள், வடிவக் கணக்கியல், ஸ்பெக்ட்ரோமீட்டர், விண்கற்கள், செயற்கைக்கோள், சீலகந்த் மீன்கள், ஹர்ஷத் எண், கேப்ரிகர் எண், லோனார் ஏரி, படிகங்கள், ஆனைக்கொன்றான் பாம்பு, இந்தியக் கடற்படைப் போர் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல், விமானப் படை, கணிதக் குறியீடுகள், ஆகம விதிகள், மண்டுக மாண்டலம், மியான்மார் பகோடா என்று பல்வேறு அறிவியல் களங்களையும்



Scanned with CamScanner

தகவல்களையும் உள்ளடக்கிய அறிவியல் புதினமாக இந்நூல் படைக்கப்பெற்றுள்ளது. இந்நூலின் ஒவ்வொரு பக்கங்களும் படைப்பாளர் மேற்கொண்ட கடினமுயற்சியையும் அறிவுத் தேடலையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

"அறிவியல் கதை என்பது இருதளங்களில் செயல்படக்கூடியது. ஒன்று அறிவியலின் கேள்விகளுக்கு இலக்கியத்தின் வழிமுறையான கற்பனையைக் கொண்டு பதில் சொல்ல முயல்வது. இது ஒரு மேலோட்டமான தளம். இரண்டு, வாழ்க்கையின் அடிப்படைக்கேள்விகளுக்கு அறிவியலின் படிமங்களைப் பயன்படுத்திக்கொண்டு பதில் தேட முயல்வது" என்பார் ஜெயமோகன். அதனடிப்படையில் இப்புதினத்தை ஆராய்ந்தால் இது அறிவியலின் கூறுகளை இலக்கியக் கற்பனை கொண்டு விளக்க முயல்கின்ற முதல் வகையினதாகவே அமைந்துள்ளது எனக் கருதமுடிகிறது.

**வகைமை நோக்கில் 6174**

அறிவியல் புனைகதைகளை ருசிய எழுத்தாளர் ஐசக் அசிமோவ் மூன்று வகையாகப் பாகுபடுத்துகிறார். அவை

1. இப்படி இருக்குமானால்
2. இது இயலுவதாக மட்டும் இருந்துவிட்டால்
3. இதுவே இத்திசையில் தொடர்ந்து முன்னேறினால்

என்பவையாகும். இயற்கையை மீறிய, அதற்கு மேற்பட்ட அல்லது வினோதமான எனப் பொருள்படும் காத்திக் வகைக்கதைகள், அறிவியல் புனைகதைகளுக்கு அடிப்படையாகத் திகழ்ந்தன எனக்கூறும் சுஜாதா, அவற்றை மூன்று வகைகளாகப் பகுக்கின்றார்.

1. "கதைமாந்தர்க்கு இயற்கையை மீறின சக்திகள் இருப்பின் அவை வன்மையான அறிவியல் புனைகதைகள் (Hard science fiction)
2. கதை மாந்தர்கள் சாதாரண மனிதர்களாய் படைக்கப்பட்டு அவர்களுக்கு அசாதாரணச் சம்பவங்கள் நிகழுமாயின் அவை மென்மையான அறிவியல் புனைகதைகள் (Soft science fiction)
3. உண்மைக்கு மிக அருகில் நடைபெறக்கூடிய, அறிவியல் விதிகளுள் அடங்கும் சிறுகதைகள் நவீன அறிவியல் புனைகதைகள் ஆகும்."[6]

லெமூரியத் தலைவர், மற்றும் அவரின் குழு ஒரு சக்திப்பீடத்தை (pyramid) இரண்டு பகுதிகளாக உடைத்துத் தனித்தனி இடங்களில் புதைத்துவிட்டு வானகம் செல்வதாகவும், செல்வதற்குமுன் மனித இனம் பீடத்தைக் கண்டுபிடிக்கும் வாய்ப்பைச் சொல்வதாகவும், அவர்களுள் ஒரு லெமூரியன் பூமியில் தங்கி பீடத்தைப் பாதுகாக்க முடிவெடுப்பதாகவும் கதை தொடங்கினாலும் கதையின் வளர்ச்சியானது தற்காலத்தில் அனந்த், ஜானகி இருவரும் மர்மமான முறையில் தொடர்பு கொள்ளப்பட்டு இந்தப் பீடத்தைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபடும் நிகழ்கால நிகழ்ச்சிகளைக் கொண்டு நகர்கிறது. அனந்த், ஜானகி, சடகோபன் போன்ற சாதாரண முதன்மைக்கதைமாந்தர்களையும் நல்லவர்கள், தீயவர்கள், லெமூரிய ஆற்றலில் நம்பிக்கை கொண்டவர்கள் போன்ற பல்திறப்பட்ட துணைமைக் கதைமாந்தர்களையும் கொண்டு படைக்கப்பட்டுள்ள இப்புதினத்தில் லெமூரியன் உடனான சந்திப்பு போன்ற அசாதாரண நிகழ்வுகள் படைக்கப்பெற்றுள்ளன. இதனை, "யெஸ் நீ பாக்கிறது எனது இன்னொரு முகம். பல ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த எனது முகம். நான் ஒரு ….." அவன் குரல் அமானுடமாக அனந்தின் முதுகுத்தண்டைச் சில்லிட்டு ரத்தத்தை உறையவைத்தது"[7] என்னும் பகுதி மெய்ப்பிக்கிறது. இதனால் இப்புதினத்தை மென்மையான அறிவியல் புனைகதை என வகைமைப்படுத்தலாம்.

**அறிவியல்கூறுகள் இலக்கிய நுட்பமாதல்**

"இலக்கியம் மொழியை முதன்மையாகக் கொண்டு உருப்பெறுவதாகும். இலக்கியத்தில் மொழியே மற்றெல்லாவற்றையும் விட முதனிலையாக அரசோச்சுகிறது. ஆனால், அறிவியல் இலக்கியத்தில் மொழியைக் காட்டிலும் அதில் கருவாக அமைந்துள்ள பொருளுக்கே முதனிலை தரப்படுகிறது."[8] அறிவியல்



Scanned with CamScanner

இலக்கியத்தில் பேசப்படும் பொருளை விளக்கும் துணைக் கருவியாக மட்டுமே மொழி அமைகிறது. 6174 புதினத்தில் விடுகதைக் குறிப்புகள், சித்திரப்புதிர், கணித சூத்திரம், சங்க இலக்கிய வெண்பாக்கள் ஆகியவற்றைக் குறிச்சொற்களாக்கி, புதிர்களாக அமைத்து இலக்கியத்தளத்திற்கும் தனக்குமான தொடர்பைப் படைப்பாளர் மெய்ப்பித்துள்ளார். அவ்வாறே தமிழ்ப் பெண்களிடம் கோலத்தினுள் ஃபினாக்கி எண்கள் ஒளிந்திருப்பதாக முன்வைக்கும் எடுத்துரைப்பும் புதிர்களை அடுக்கடுக்காக அமைத்துக் கதைப்போக்கில் அதனை விடுவிக்கும் உத்தியும் இவர் படைப்பின் புதிய திசைகளை அடையாளம் காட்டுவனவாகவே உள்ளன.

## அறிவியல் புனைவின் மொழிநடை

அறிவியல் புனைகதைகளில் இடம் பெறும் சொல்லாட்சியும் கூர்மையானதாகவும், பன்முகத்தன்மை உடையதாகவும் விளங்க வேண்டும். மேலும் எதிர்கால அறிவியல் சாதனங்களை விவரிக்கும் வருணனைகளில் மொழிநடை எளிமையாகவும், சிக்கலில்லாமலும் அமைதல் வேண்டும். எளிமையான சொல்லாட்சி, வாசகர்களின் கற்பனைத்திறனை வளர்க்கும் விதத்தில் அமைக்கப்படும் வருணனை ஆகியவை இன்றியமையாதவை. "அறிவியல் புனைகதைகள் என்றால் உடனே ராக்கெட்டில் ஏறி சந்திர மண்டலத்திற்கு ஓடிப் போகிற செய்தியாய் இல்லாமல், எதிர்காலச் சாத்தியங்களை, புதிய கருத்துக்களை சொல்கிறவையும்தான்"[9] என்னும் ந.சஞ்சீவியின் கருத்தினையொட்டி, மாறுபட்ட கோணத்தில் கற்பனை கலந்து அறிவியல் கண்ணோட்டத்தில் புனைகதைகள் எழுதப்பட வேண்டும்.

மியான்மரின் சுரங்கத்தில் சக்திபீடம் கண்டெடுக்கப்பட்டதாக இப்புதினம் எடுத்துரைக்கிறது. இதனை, "பிரமிட். மிகப் பெரியதாகவும் இல்லாமல், மிகச் சிறியதாகவும் இல்லாமல் மூன்று அடி உயரத்தில் நான்கு அடி அகலத்தில் பட்டை தீட்டப்படாத வைரக்கல் போல மங்கலாகத் தெரிந்தது. பகோடாவை நோக்கியிருந்த திசையில் பீடமுகம் சாய்வாகப் படிகளுடன் அமைந்து கீழே, மிகக்கீழே ஆழத்தில் மறைந்தது" (ப. 348) என்று அறிவியல் நோக்கில் 6174 புதினம் கையாண்டுள்ள சொல்லாட்சி அறிவியல் புனைகதைகளின் மொழிநடையைப் புலப்படுத்துகிறது. அவ்வாறே பிரிந்துபோன காதலர்களாம் அனந்தும் ஜானகியும் பல ஆண்டுகளுக்குப் பிறகு குழுவில் இணைந்து தேடலைத் தொடர்வதாகப் புனையப்பட்டிருந்தாலும் எங்குமே காதல் வசனங்களோ பிரிவுக்கான புலம்பல்களோ இல்லாதிருப்பது கதையின் போக்கிற்கு இடையூறு ஏற்படுத்தாத மொழிநடையாக அமைந்துள்ளது. எனினும் அறிவியல் கருத்துக்களைக் கதைப்போக்கில் கையாளும் நிலையில் அதனை விளக்கியுரைக்கும் தன்மையைப் படைப்பாளரால் பல இடங்களில் தவிர்க்க இயலவில்லை என்னும் அறிவியல் புனைகதைகளின் தன்மையும் இதில் தெளிவாக வெளிப்படுகிறது.

## புதிய படைப்பாக்க முயற்சி

அறிவியல், வரலாறு என்னும் இரண்டு களங்களை ஒருசேர அடியொற்றி எழுதப்பெற்ற புதினங்கள் ஆங்கிலத்தில் பரவலாக உள்ளன. ஆனால் தமிழில் அத்தகைய படைப்பாக்கம் இல்லாத நிலையில் புதிய படைப்பாக்க முயற்சியைச் சுதாகர் 6174 புதினத்தில் கையாண்டுள்ளார் எனில் மிகையில்லை. வரலாறுக்கும் அறிவியலுக்கும் இடையேயான பயணமாகப் படைக்கப்பட்டுள்ள போதிலும் கணிதம், படிகவியல், வானவியல், அரசியல் போன்ற துறைகளும் இதனுள் இழையோடிக் கிடக்கிறது. புதிர்களைத் தமிழ்ச்செய்யுள் வடிவில் வழங்கியுள்ள முறையும் சிக்கலான அறிவியல் கொள்கைகளை எளிய நடையில் விளக்கும் திறனும் இப்புதினத்தின் பலமாகவே அமைந்துள்ளது. லெமூரியர்களின் அழிவு நோக்கத்தைப் புரிந்துகொள்வதைவிட அதைத் தடுக்கும் முயற்சியில் மட்டுமே கதை கவனம் கொள்கிறது. ஆனால் எடுத்துரைப்பில் செலுத்திய கவனம் கதைமாந்தர் உருவாக்கத்திலும் அவர்தம்



Scanned with CamScanner

உரையாடல்களில் போதுமான அளவில் வெளிப்படவில்லை என்றாலும் தமிழுக்கு இப்புதினம் புதிய திசையை அடையாளம் காட்டியுள்ளது என்பது மறுப்பதற்கில்லை.

## தொகுப்புரை

லெமூரியாக் கண்டத்தின் அழிவுக்காலத்தில் தங்களின் சக்திபீடம் மனிதர்களிடம் சிக்கிவிடக்கூடாது என்னும் நோக்கில் லெமூரியர்கள் அதனை இரு துண்டுகளாக உடைத்து இருவேறு இடங்களில் மறைத்து வைத்த சூழலைப் பின்புலமாகக் கொண்டு தொடங்குவதாக சுதாகர் 2012இல் 6174 புதினத்தைப் படைத்துள்ளார். இந்தச் சக்திபீடத்தைக் கண்டெடுக்கும் முயற்சியில் அறிவியலாளர்கள், நம்பிக்கையாளர்கள், சமூகவிரோதிகள் என அனைவரும் ஈடுபடும் பயணத்தை எடுத்துரைக்கும் வகையில் இப்புதினம் படைக்கப்பெற்றுள்ளது. கேபரிகர் மாறிலியான எண்ணைக் கதைத்தலைப்பாகக் கொண்டுள்ள இப்புதினம் அசாதாரணமான நிகழ்வுகளைச் சாதாரண கதைமாந்தர்களைக் கொண்டு நகர்வதால் மென்மை அறிவியல் புதினமாக அறியப்படுகிறது. பிரமிடுகள், பிராமி எழுத்துகள், கோலங்கள், வடிவக் கணக்கியல், விண்கற்கள், செயற்கைக்கோள், சீலகந்த் மீன்கள், ஹர்ஷத் எண், கேப்ரிகர் எண், லோனார் ஏரி, படிகங்கள், ஆனைக்கொன்றான் பாம்பு, கணிதக் குறியீடுகள் போன்ற அறிவியல் கூறுகள் கதைப்போக்கில் துணைசெய்யும் காரணிகளாக அமைந்துள்ளன. இத்தகைய அறிவியல் கூறுகளை இலக்கிய நுட்பங்களாகக் கையாளும் முயற்சி மேற்கொள்ளப்பெற்றுள்ள இப்புதினம் வரலாறு, அறிவியல் என்னும் இருவேறு துறைகளின் இணைப்பாக அமைகின்ற புதிய இலக்கிய வகைமையைத் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்துவதாக அமைந்துள்ளது எனில் மிகையில்லை.

## சான்றெண் விளக்கம்

1. இரா.நடராசன், காலம் தேடிய தமிழனின் அறிவியல் தமிழ் வரலாறு, ப.351
2. மணவை முஸ்தபா, தமிழில் அறிவியல் படைப்பிலக்கியம், ப.58.
3. சுஜாதா, விஞ்ஞானச் சிறுகதைகள், ப.III.
4. நெல்லை சு.முத்து, அறிவியல் உங்களுக்காக,ப.52.
5. க.சுதாகர், 6174, ப.11
6. சுஜாதா, மு.நூ., ப.2.
7. க.சுதாகர், மு.நூ., ப. 314
8. மணவை முஸ்தபா, காலந்தேடும் தமிழ், ப.59.
9. மா.இராமலிங்கம், நாவலிலக்கியம், ப.31.

## துணைநூற்பட்டியல்

1. இராமலிங்கம்.மா., நாவலிலக்கியம், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1978.
2. சுதாகர்.க., 6174, வம்சி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2016
3. சுஜாதா, விஞ்ஞானச் சிறுகதைகள், உயிர்மை பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2007.
4. நடராசன்.இரா., காலம் தேடிய தமிழனின் அறிவியல் தமிழ் வரலாறு, மீரா பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு, 1995.
5. நெல்லை சு.முத்து,அறிவியல் உங்களுக்காக, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2004.
6. மணவை முஸ்தபா, காலந்தேடும் தமிழ், மீரா பப்ளிகேஷன், சென்னை, முதற்பதிப்பு, 1989.
7. மணவை முஸ்தபா, தமிழில் அறிவியல் படைப்பிலக்கியம், மணவை பதிப்பகம், சென்னை, பதினாறாம் பதிப்பு, 2001.

ஆ



Scanned with CamScanner

தொகுதி-9 எண்-1
Vol. 9 No. 1

மார்கழி 2051 - பங்குனி 2052
January - March 2021

ISSN : 2321-0737


| | | | |
|---|---|---|---|
| 1. | கு. ஜெயபிரபா & பொ. இராமநாதன் | திரைப்படப்பாடல்களில் வேளாண்மை | 1-6 |
| 2. | PAUL TITUS J | IMPORTANCE OF LAND REFORMS FOR THE EMPOWERMENT OF DALITS IN CONTEMPORARY TAMIL NADU | 7-14 |
| 3. | க. இராமதிலகம் | சமூகநோக்கில் மினிர் கல் | 15-20 |
| 4. | ப. கோபிகிருஷ்ணன் | அகநானூற்றில் சொல், சொல்லாக்க உத்திகள் | 21-24 |
| 5. | ஜெ. ஜெபா & எஸ். அலெக்஬் ஜேக்கப் | பழமொழிகளில் சமுதாய நோக்கு | 25-31 |
| 6. | க.ராமலட்சுமி & ப. கல்பனா | விருந்துணவும் விருந்தோம்பற்பண்பும்-மலைபடுகடாம் நூலை முன்வைத்து | 32-35 |
| 7. | ப. ராஜேஸ்வரி & சே. தெய்வக்கன்னி | வைணவம் பற்றிய வரலாற்றுச் சான்றுகள் | 36-40 |
| 8. | பி. ராணி | அறுவகை இலக்கணத்தில் எழுத்ததிகாரத்தின் இயல் வைப்பு முறைகள் | 41-45 |
| 9. | ரா. கோமளஸ்வரி | தொல்காப்பிய மூலப்பதிப்பின் தோற்றப்பின்னணி | 46-53 |
| 10. | நா.சிந்து | கலித்தொகையில் முல்லைநிலக் கூறுகள் | 54-59 |
| 11. | வே. ராசாம்பாள் | ஆற்றுப்படையில் வணங்களும் வருணனைகளும் | 60-65 |
| 12. | அ. அருள்மொழி | புறநானூற்றில் வாழ்வியல் நெறிகள் | 66-69 |
| 13. | இரா. சித்ரா | தமிழ் சிறுபத்திரிக்கையில் தீபம் இதழ் | 70-74 |
| 14. | பா. கடரோனி | குறுந்தொகைப் பாடல்களில் தலைவனின் மன உணர்வு | 75-79 |
| 15. | த. முத்துலெட்சுமி & க. மல்லிகா | ஐங்குறுநூறு காட்டும் வாழ்க்கை நெறி | 80-84 |
| 16. | தா. தரணி & ச. சுமதி | அஞ்ஞாடி நாவலில் பஞ்சமும் அவலநிலையும் | 85-90 |
| 17. | D. UMADEVI | ANALYSIS OF A MYTHICAL CHARACTER "ALLI" IN FEMINIST, FEMALE AND FEMININE PERSPECTIVES | 91-98 |
| 18. | செ. வீரலட்சுமி | தொல்காப்பிய மெய்ப்பாடும் குறுந்தொகை சுட்டும் தாய்மையும் | 99-103 |
| 19. | என்.செல்வி | ஒரு ஜெருசலேம் சிறுகதைகளில் பெண்கள் நிலை | 104-108 |
| 20. | ம. சுரேஷ் & வே. சுந்தரராமன் | சமூக ஊடகங்களில் பகிரப்படும் போலித் தகவல்களின் தாக்கம் குறித்த பங்கேற்பு அணுகுமுறை ஆய்வு | 109-113 |
| 21. | நா.இரமேசு & பெ. கண்ணன் | தமிழ் இலக்கிய வரலாற்றில் நாடகங்களின் பங்களிப்பு | 114-121 |
| 22. | இ. ஜெயஶ்ரீ & மா. சண்முகம் | காப்பியங்களில் திருநங்கைகள் | 122-126 |
| 23. | இரா. வேலுசாமி | அஞ்ஞாடி புதினத்தில் அழகியல் | 127-131 |
| 24. | ச. ஆனந்தி | குறுந்தொகையில் குறிஞ்சித்திணைப் பாடல்கள் | 132-144 |
| 25. | க.ஜெயகாந்தி & க. இக்பால் | இமையம் அவர்களின் 'நறுமணம்' சிறுகதைத் தொகுப்பில் சமுதாயச் சிந்தனைகள் | 145-150 |
| 26. | ரா. சங்கரி & இரா. உமாதேவி | தொல்காப்பியம் கூறும் புறப்பொருள் அறநெறிகள் | 151-158 |
| 27. | ந. பிரபாகரன் & S. நாகூர்கனி | நொய்யலும், நோயும் | 159-162 |
| 28. | ரா. கலைவாணி | நவீனக் கவிதைகளில் வாழ்வியலும் அழகியலும் | 163-166 |
| 29. | கு. கங்காதரன் | திரையிசைப்பாடல்களும் திரைப்பாடினிகளும் | 167-170 |
| 30. | பா. கிருஷ்ணமூர்த்தி & மு. பாண்டி | செவ்விலக்கிய மரபுக் கூறுகள் | 171-177 |
| 31. | இல. மேனகா & பெ. கண்ணன் | பொறுப்பு நாவல் சுட்டும் திருமணச்சடங்குகள் | 178-182 |
| 32. | சே. மேரி & து. மேஷாக் | தமிழ்க் கிறித்தவ நாடகங்கள் காட்டும் மரபு மாற்றம் | 183-187 |
| 33. | ஞா.பெஸ்கி | க.சுதாகரின் 6174 புதினத்தில் அறிவியல் புனைவுகள் | 188-193 |
| 34. | இரா.முரளி கிருட்டினன் | கம்பரின் எதிர்கால்வியல் சிந்தனைகள் | 194-197 |
| 35. | மு. பாரதி | சங்க மாந்தர்களின் இறைவழிபாடும், நம்பிக்கையும் | 198-202 |
| 36. | மு. செந்தில்குமார் | கலைஞரின் நகைச்சுவை உணர்வு | 203-210 |
| 37. | வெ.திருவேணி | சிலப்பதிகாரத்தில் கோப்பெருந்தேவியின் மாண்பு | 211-218 |
| 38. | கு. விமலாரமணி & தே. இந்திரகுமாரி | விந்தனின் கதைப்போக்குகளும் உத்திகளும் | 219-225 |
| 39. | இரா. இராஜா & ம.இளையராஜா | சு. சமுத்திரத்தின் பூ நாகம் (சிறுகதை தொகுப்பு) காட்டும் சமூகம் | 226-229 |
| 40. | எம். பானுமதி | முல்லைத்திணைப் பாடல்களில் விலங்குகள் | 230-235 |
| 41. | S. UMA GOWRI & SUNITHA | THE GROWTH OF BHARATHANATYAM IN TAMILNADU SINCE SANGAM PERIOD | 236-241 |
| 42. | வே.தா.தர்மராஜா | நான்மணிக்கடிகை உணர்த்தும் அறநெறிகள் | 242-248 |
| 43. | பெ. சுமதி | அகநானூறு மருதநில மாந்தர்களின் சுயசிந்தனை வெளிப்பாடு | 249-255 |
| 44. | ஆர். சரவணன் & நீல. மாதவன் | நீதி இலக்கியங்களும் தமிழ்ச்சமுதாயமும் | 256-265 |
| 45. | சா.அனி கரோலின் & ஆ.விஜயலெட்சுமி | சுஜாதாவின் வாழ்வும் படைப்பும் | 266-271 |
| 46. | ஶ்ரீ. அழகுலெட்சுமி & இரா. பழனிச்சாமி | திலகவதி புதினத்தில் உறவுகளால் தோன்றும் பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள் | 272-277 |
| 47. | கா. இரவிச்சந்திரன் | குறியீடும் சங்கேதமும் (SIGN AND CODES): மொழி, வணிகம், தமிழ் மரபு | 278-289 |
| 48. | மு. ஜோதி & பே. கிறிஸ்துமணி | சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலமக்களின் தொழில்களும், நம்பிக்கைகளும் | 290-294 |
| 49. | இரா. அருணா | உளவியல் நோக்கில் கணினி வழி தமிழ் இலக்கணம் கற்றல்-கற்பித்தல் | 295-298 |
| 50. | மா. செல்வகுமார் | தமிழ் இலக்கியங்களில் நதிகள் | 299-302 |


Published by : Raja Publications, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : The Printing House, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

Scanned with CamScanner